பக்கங்கள்:-19

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 05 | வெள்ளிக்கிழமை | 20.12.2024 | அதிர்வு 140

## முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடக் கூட்டம் இன்று



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் கட்சியின் தலை 07



# இலங்கையின் பொறுப்புக்கூறலை அர்த்தமுள்ளதாக்குக!

## கனேடிய அரசிடம் சிறீதரன் எம்.பி. கோரிக்கை

"ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில், இலங்கை அரசுக்கு இனியும் கால நீடிப்பும் அரசியல் வெளியும் வழங்காது, பொறுப்புக்கூறல் தொடர்பான குற்றவியல் பொறுப்புத் தொடர்பான சர்வதேச விசாரணையை நோக்கி அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் விதத்தில் அடுத்த தீர்மானத்தில் தகுந்த தரமுயர்த்தல் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது எமது மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. இலங்கை தொடர்பான தீர்மானங்களைப் பிரேரிக்கும் மையக் குழு நாடுகளிடம் இந்தத் தரமுயர்த்தலை நாம் வேண்டி நிற்கின்றோம்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவரும் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். 05

# புதிய அரசமைப்பை அநுரகுமாரவாவது நிறைவேற்றுவார் என எதிர்பார்க்கிறோம்



## முன்னாள் சபாநாயகர் கரு தெரிவிப்பு

"முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் உருவாக்கப்பட்ட அரசமைப்பு அன்று நிறைவேற்றப்பட்டிருந்தால், இன்று நாடு பாரியளவில் முன்னேற்றமடைந்திருக்கும். தற்போதைய ஜனாதிபதியாவது அதனை நிறைவேற்றுவார் என எதிர்பார்க்கின்றோம்."

– இவ்வாறு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை இலக்காகக் கொண்டு கொழும்பில் தற்கொலைக் குண்டுத் 07




கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக நீடிக்கும் மாவை சேனாதிராஜாவைத் தொடர்ந்து அப்பதவியில் தக்க வைக்கும் முயற்சியாக யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தொடரப்பட்ட வழக்கு இப்போதைய நிலையில் ஜனவரி 7 ஆம் திகதிக்குத் தள்ளி வைக்கப்பட்டுவிட்டது.

வரும் 28ஆம் திகதி இவ்விடயத்தை ஒட்டி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவின் கூட்டத்தில் வாக்கெடுப்பு நடக்க இருக்கையில், அதில் மாவை சேனாதிராஜாவுக்கு ஏற்படக்கூடிய பின்னடைவைச் சமாளிப்பதற்காக தொடுக்கப்பட்ட இந்த வழக்கு, அந்த நாளுக்கு பின்னான ஒரு திகதிக்குப் பிற்போடப் பட்டிருப்பதால் வழக்குத் தொடுநர்களுக்கு ஒரு வகையில் இது ஒரு சறுக்கல்தான்.

இந்த வழக்கின் மூலம் ஒரு தலைப்பட்சமாக மேற்படி மத்திய குழுக் கூட்ட வாக்கெடுப்புக்கு இடைக்காலத் தடை விதிக்க எடுக்கப்பட்ட முயற்சி இன்றைய நிலையில் சரிவரவில்லை 05

# விக்கிக்கு ஏற்பட்ட நிலையே அர்ச்சுனாவுக்கும் ஏற்படுமாம்

## அகில இலங்கை மக்கள் எழுச்சிக் கட்சி கூறுகின்றது




(எஸ்.நிதர்ஷன்)

அரசியலில் சி.வி.விக்னேஸ்வரனுக்கு ஏற்பட்ட நிலைமையே வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கும் ஏற்படும் என அகில இலங்கை மக்கள் எழுச்சிக் கட்சியின் தலைவர் அருள் ஜெயேந்திரன் தெரிவித்தார்.

சமகால நிலைமைகள் தொடர்பாக யாழ் ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வைத்தியர் அர்ச்சுனா சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை பிரச்சினையைப் பயன்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினராகியுள்ளார். அது சிறந்த விடயம். ஆனால், அந்த விடயங்களை நிரூபிக்க அவர் தவறியுள்ளார். அவர் தவறாகச் செயற்படுவதால் தற்போது பல வழக்குகளை எதிர்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி ஐயாவுடன் தற்போது தானே பெரிய ஆள் என்பது போல் அவர் முரண்படுகிறார். அரசியலில் விக்னேஸ்வரனுக்கு ஏற்பட்ட நிலைமையே வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கும் ஏற்படும்.

எதிர்வரும் காலத்தில் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுவதற்கு நாங்கள் தற்போது தீர்மானித்துள்ளோம்.

நாட்டில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக நாங்கள் தற்போது தயாராகி வருகின்றோம். அத்துடன் வடக்கு மாகாணத்தை சிங்கப்பூராக உயர்த்துவதற்கு எம்மைப் போன்ற வர்த்தகர்களை மக்கள் தெரிவு செய்ய வேண்டும்." – என்றார்.

# புதுக்குடியிருப்பு பிரதேச வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ஆளுநருடன் கலந்துரையாடல்







புதுக்குடியிருப்பு பிரதேச வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனைச் சந்தித்து, புதுக்குடியிருப்பு வர்த்தகர் சங்கத்தினர் நேற்று வியாழக்கிழமை காலை கலந்துரையாடல் நடத்தினர்.

ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்ற வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள், ஆளுநர், முல்லைத்தீவு மாவட்ட செயலராகக் கடந்த காலத்தில் பணியாற்றியமை நினைவுகூர்ந்தனர்.

மேலும், புதுக்குடியிருப்பு பிரதேச வர்த்தகர் சங்கக் கட்டடத்தின் எஞ்சிய வேலைகளை நிறைவுசெய்வதற்கு நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்ததுடன், பிரதேசத்தின் வேறு பல தேவைகள் தொடர்பிலும் ஆளுநருடன் அவர்கள் கலந்துரையாடினர்.

வர்த்தகர் சங்கத்தினரின் கோரிக்கைகளை சாதகமாக அணுகிய ஆளுநர், விரைவில் புதுக்குடியிருப்புக்கு வந்து அங்குள்ளவர்களை நேரில் சந்திப்பதாகவும் குறிப்பிட்டார்.

# சஜித்தின் சான்றிதழ்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும்

## இப்படி அமைச்சரவைப் பேச்சாளர் சொல்கின்றார்






எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் காண்பித்த சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

தனது கல்வித் தகைமை தொடர்பான சான்றிதழ்களையும், ஆவணங்களையும் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் முன்வைத்து உரையாற்றினார்.

எனவே, ஆளுங்கட்சியினரின் சான்றிதழ்கள் எப்போது முன்வைக்கப்படும் என நேற்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் கூறியவை வருமாறு:-

"சான்றிதழ்கள், ஆவணங்களை எதிர்க்கட்சித் தலைவர் நாடாளுமன்றத்தில் காண்பித்திருந்தார். ஆனால், நாடாளுமன்ற ஹன்சாட்டுக்கு நேற்று (நேற்றுமுன்தினம்) மாலை வரை அனுப்பவில்லை. இன்று (நேற்று) காலையும் தேடிப் பார்த்தேன், அவை கையளிக்கப்படவில்லை.

எனவே, எதிர்க்கட்சித் தலைவர் அவற்றை வழங்கிய பின்னர் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவ்வாறு ஆராய்ந்த பிறகு அது பற்றி அறிவிக்கப்படும்." - என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டார்.

# குரங்குகளை சீனாவுக்கு அனுப்புவது குறித்து தற்போதைய அரசு முடிவெடுக்கவில்லையாம்



குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வது தொடர்பில் தற்போதைய அரசு அவதானம் செலுத்தவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"குரங்கு உள்ளிட்ட விலங்குகளால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுப்பதற்கு முன்வைக்கப்பட்டுள்ள பெரும்பாலான யோசனைகள் நீண்டகால திட்டங்களாகும்.

அவற்றை நடைமுறைப்படுத்தும் வரை விவசாயிகளுக்கும், மக்களுக்கும் காத்திருக்க முடியாது. எனவே, குறுகிய கால திட்டங்கள் தொடர்பில் தற்போது ஆராயப்பட்டு வருகின்றது.

குரங்குகள் போன்ற மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விலங்குகளை நாட்டின் வேறு பகுதிகளுக்கு கொண்டு செல்லல் மற்றும் இனப்பெருக்க கட்டுப்பாட்டுக்கான நடவடிக்கைகள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. மாறாக குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வது குறித்து கலந்துரையாடப்படவில்லை." - என்றார்.

# நாட்டைக் காட்டிக்கொடுக்கும் வகையில் இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்யவில்லை

## வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் திட்டவட்டம்




"நாட்டைக் காட்டிக்கொடுக்கும் வகையில் இந்தியாவுடன் எதுவித ஒப்பந்தமும் கைச்சாத்திடப்படவில்லை." – என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் திட்டவட்டமாக அறிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"இந்தியாவுடன் இணைப்புகளை உருவாக்குவது தொடர்பில் எதிரணியில் இருக்கும்போது மாறுபட்ட கருத்துகளை தேசிய மக்கள் சக்தி வெளியிட்டது. ஆனால், ரணில் விக்கிரமசிங்க உடன்பட்ட சகல ஒப்பந்தங்களுக்கும் தற்போதைய அரசும் உடன்பட்டுள்ளது. எட்கா ஒப்பந்தம் பற்றி அரசின் நிலைப்பாடு என்ன? எமது நாட்டு சக்தியை இந்தியாவுடன் இணைப்பது, இந்திய ரூபா பயன்பாட்டை அனுமதிப்பது உள்ளிட்ட விடயங்களுக்கு ரணிலுக்கு ஆணை வழங்கியது யாரென இதற்கு முன்னர் அநுரகுமார திஸாநாயக்க கேள்வி எழுப்பி இருந்தார். எனவே, ரணிலின் நிகழ்ச்சி நிரலை இந்தியாவுடன் செயற்படுத்துவதற்கு தற்போதைய அரசுக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளதா?" – என்று நளின் பண்டார எம்.பி. வினவியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்,

"அநுரகுமார திஸாநாயக்கவுக்கு மக்கள் ஆணை கிடைத்துள்ளது. ரணிலுக்கு ஆணை கிடைக்கவில்லை. இலங்கையில் நாம் சக்தியை உற்பத்தி செய்வோம். மேலதிகமாக இருப்பவற்றைப் பொருளாதார ஒத்துழைப்பின் அடிப்படையில் பிம்ஸ்டெக் வலய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் என நாம் தெளிவாகக் கூறியுள்ளோம். இது நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடிய விடயம். வருமானமும் கிட்டும்.

இந்தியாவுடன் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் கூட்டறிக்கையில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. நீங்கள் (நளின் பண்டார) கூறுவதுபோல் நடக்கவில்லை. குறிப்பாக நாட்டைக் காட்டிக்கொடுக்கும் வகையில் எந்த ஒப்பந்தமும் கைச்சாத்திடப்படவில்லை." – என்றார்.

# ரயில் மோதி குடும்பஸ்தர் சாவு!

## கொட்டகலையில் சம்பவம்



(க.கிஷாந்தன்)

திம்புள்ள – பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை பகுதியில் ரயிலில் மோதி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவது,

கொட்டகலை ரயில் நிலையத்துக்கு அருகாமையில் கொழும்பில் இருந்து பதுளை நோக்கிச் சென்று கொண்டிருந்த இரவு நேர ரயிலில் மோதுண்டே மேற்படி நபர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கொட்டகலை, கங்கைபுரத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான வெள்ளைச்சாமி ஜெயக்குமார் (வயது – 40) எனப் பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் தற்கொலை செய்துகொண்டாரா? அல்லது ரயிலுடன் மோதுண்டு இறந்தாரா? என்பது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சடலம் கொட்டகலை ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு வைத்திய பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்றே தோன்றுகின்றது.

இப்போது (நேற்றும் இன்றும்) யாழ் மாவட்ட நீதிபதி பணி விடுமுறையில் இருக்கின்ற காரணத்தினால் இந்த வழக்கு விசாரிக்கப்படாமல் ஏழாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுவிட்டது. இன்றோடு நீதிமன்றங்களுக்கு வருடாந்த இறுதி விடுமுறை என்பதால் இனி வரும் 7 ஆம் திகதி நீதிமன்றம் கூடும்போதுதான் தான் இந்த வழக்கு எடுக்கப்பட முடியும். அதற்கு முன்னர் வரும் 28 ஆம் திகதி தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூடி கட்சியின் தலைவர் சர்ச்சை குறித்து ஒரு தீர்மானத்தை எடுத்து விடும்.

ஆயினும் வழக்கின் அவசரம் கருதி இந்த விடயத்தை நீதிமன்ற விடுமுறை சமயத்திலும் பரிசீலனைக்கு எடுக்க ஒரு நகர்த்தல் பத்திரம் மூலம் வழக்காளிகள் கோரலாம். அப்படி வரும் வாரத்தில் வழக்கை எடுத்து, இடைக்கால உத்தரவு வழங்க வேண்டும் என்று கோரிக்கையை நீதிபதியின் பரிசீலனைக்கு அவர்கள் கொண்டுவர முடியும். அப்படிக் கொண்டு வந்தாலும் இவ்விடயத்தில் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் நடவடிக்கைகளுக்கு இடைக்காலத் தடை விதிக்கும் சாத்தியம் எவ்வளவு தூரம் உண்டு என்பது தெரியவில்லை.

நீதிமன்றின் முன் விசாரணையில் இருக்கும் ஒரு வழக்கைப் பற்றிய விடயங்களை சட்ட ரீதியாக ஒரு பத்தியில் ஆராய்வது பொருத்தமற்றது என்பதால் விரிவாகவன்றி சுருக்கமாக சில விடயங்களை மட்டும் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன்.

இந்த வழக்கின் பிரதியைப் பார்த்த இளம் சட்டத்தரணி ஒருவர், "இது முற்றும் முழுதாக மாவை சேனாதிராஜாவின் நலனைக் கவனத்தில் கொண்டு அவருக்கான நிவாரணங்களைக் கோரி தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. ஆனால் அவரது பெயர் வழக்காளியாக இல்லாமல் எதிராளியாக இருக்கின்றதே. அதனால் இது ஒரு விசித்திரமான – விநோதமான – வழக்கு என்றே தோன்றுகின்றது" – எனக் குறிப்பிட்டார்.

"இந்த வழக்கைத் தாக்கல் செய்வதற்கான ஒரு சட்ட அடிப்படை காத்திரமாக இருக்கின்றது. ஆனால் அது வழக்கில் முழு அளவில் எடுத்தியம்பப்பட்டிருப்பதாக – பிரதிபலிக்கப்பட்டிருப்பதாக – தெரியவில்லை." – என்று இன்னொரு சட்டத்தரணி குறிப்பிட்டார்.

அவை பற்றிய விடயங்களை வழக்கு முன்நகர்வு முடிந்த பின்னர் விவரிக்கலாம் என்று நினைக்கிறேன். ஆயினும் கைக்குக் கிடைத்த சட்ட வாய்ப்பு சரியாகப் பயன்படுத்தப்படவில்லை என்றே தோன்றுகிறது...!

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் கனேடிய வெளிவிகார அமைச்சின் இந்தோ – பசுபிக் பிராந்தியங்களுக்கான பிரதி அமைச்சர் வெல்டன் எப் உள்ளிட்ட கனேடிய அரசியல் தரப்பினருக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று கனடா – ஒட்டாவாவில் உள்ள அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் கனேடிய பிரதி அமைச்சரிடம் எழுத்து மூல கோரிக்கை ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அந்தக் கோரிக்கைக் கடிதத்தின் முழு வடிவம் வருமாறு,

"ஈழத்தமிழர் மீது திட்டமிடப்பட்ட தொடர்தேர்ச்சியான இன அழிப்பு இலங்கைத் தீவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இன்று நாடாளுமன்றக் குழுத் தலைவராக நான் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழர்களின் பிரதான கட்சியான தமிழரசுக் கட்சி 1956 ஆம் ஆண்டில் நிறைவேற்றிய திருகோணமலைப் பிரகடனத்தில் எவ்வாறு இந்தத் திட்டமிடப்பட்ட இன அழிப்பை இலங்கை அரசு கட்டமைப்பு ரீதியாக மேற்கொள்ள ஆரம்பித்துள்ளதென்பதை ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவரான மறைந்த தந்தை செல்வா ஆரம்பத்திலேயே தெளிவாக விளக்கியிருந்தார். அதன் ஒரு வடிவமாகவே ஒற்றையாட்சி அரசமைப்பு தொழிற்படுகின்றது என்று சர்வதேச தரப்புகளை நோக்கி இலங்கை எதிர்நோக்கும் சிக்கல் என்ற வெளியீட்டை முதல் முதலாக சர்வதேசம் நோக்கி தமிழரசுக் கட்சி முன்வைத்திருந்தது. இது தொடர்பில் அன்று தொட்டு இன்று வரை சர்வதேசத்தின் பங்கை மக்கள் பிரதிநிதிகளாக நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

மேற்குறித்தபடி, 1956 ஆம் ஆண்டில் இந்தத் திட்டமிட்ட இன அழிப்பு என்பதைத் தெளிவாக அடையாளப்படுத்த முன்னரே தீவில் இன ரீதியான ஒடுக்குமுறை ஆரம்பித்திருந்தது. இலங்கை சுதந்திரம் அடைந்ததாகக் கூறப்பட்ட 1948 இல் இருந்தே தமிழர்களின் குடிப்பரம்பலை அவர்களின் வரலாற்று, மரபுவழித் தாயகத்தில் மாற்றியமைக்கும் வகையில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்தல் என்பதும் மலையகத் தமிழர்களின் குடியுரிமைப் பறிப்பு உள்ளிட்ட, இதர அடக்குமுறைகளும் ஆரம்பித்துவிட்டிருந்தன.

திட்டமிட்ட இன அழிப்பின் போக்கில் இறுதியாக, பெரும் சீர இன அழிப்புப் போரை எமது மக்கள் 2009 ஆம் ஆண்டில் எதிர்கொண்டு அழிவுக்குள்ளான பேரவலம் நடைபெற்றது. ஆயுதப் போராட்டத்துக்கு முன்பதான நீண்டதொரு அமைதிவழிப் போராட்டத்தின்போது தமிழ் மக்களின் உள்ளக சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான கூட்டாட்சிக் கோரிக்கை பல முறை நிராகரிக்கப்பட்டுவிட்டது.

நேரடிப் பேச்சுகளில் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக இணங்கிய உடன்படிக்கைகளையும் இலங்கையின் ஆட்சியாளர்கள் ஒருதலைப்பட்சமாக மீறி, மேலும் பேரினவாதமாகக் கெட்டியாக்கப்பட்ட ஒற்றையாட்சி அரசமைப்புகளை தமிழ் மக்களின் பங்கேற்பின்றி உருவாக்கினர்.

அமைதிப் போராட்டம் வன்முறையாலும் இனக் கொலைத் தாக்குதல்களாலும் அடக்கி ஒடுக்கப்பட்டது. அமைதி வழிமுறைகள் அனைத்தும் முயற்சிக்கப்பட்டு பலனிளிக்காதவிடத்து சர்வதேச சட்டம் அளிக்கும் இறுதி வழியான கிளர்ச்சி செய்யும் உரிமையின் பாற்பட்டும், பிரபலமான 1977 வட்டுக்கோட்டைத் தீர்மானம் வழங்கிய மக்கள் ஆணையின் பாற்பட்டும், ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகியது. அதன்போது ஏற்பட்ட பல்வேறு சமாதான முயற்சிகளும் தென்னிலங்கைத் தரப்புகளின் இனவாதப் போக்கினால் முடக்கப்பட்டன. இடையில் கொண்டுவரப்பட்ட அதிகாரப் பரவலாக்க அரசமைப்பு ஒழுங்குகளையும் முழுமையாக அமுலாக்காமல் ஒற்றையாட்சி முறை தடுத்து வருகின்றது. இவையெல்லாம் தங்களுக்கும் தெரிந்த வரலாறாக இருப்பினும் எனது கோரிக்கைகளின் சூழமைவை எடுத்தியம்புவதற்காக இங்கு இவற்றைச் சுருக்கமாகக் குறிப்பிட்டேன்.

இந்த அடிப்படையில், இலங்கைத் தீவு தொடர்பான பொறுப்புக்கூறல் அர்த்தமுள்ளதாகுவதெனில் அதைப் பின்வரும் மூன்று விதமாகப் படிநிலைப்படுத்தப்பட்ட முக்கியத்துவத்தோடும் ஒழுங்கோடும் அணுக வேண்டும் என்பது எமது பார்வையாக உள்ளது.

1) தலையாய சர்வதேசக் குற்றமான இன அழிப்புத் தொடர்பான பொறுப்புக் கூறல்

2) இதர சர்வதேசக் குற்றங்களான போர்க்குற்றங்கள், மனிதத்துவத்துக்கு எதிரான குற்றங்கள், சித்திரவதை, வலிந்து காணமலாக்கப்பட்டமை ஆகியவை பற்றிய பொறுப்புக்கூறல்

3) மேற்குறித்த குற்றங்கள் மீள்நிகழாமையை உறுதிப்படுத்தும் வகையில் பல பத்தாண்டுகளாகத் தீர்க்கப்படாது புரையோடிப்போயிருக்கும் தேசியப் பிரச்சினைக்கான தீர்வை, குறிப்பாகத் தமிழ் பேசும் மக்களின் தனித்துவமான சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தும் கூட்டாட்சி அரசமைப்பொன்றை ஏற்படுத்துவதும் பொறுப்புக்கூறலின் முக்கிய பெறுபேறாக அமையவேண்டும்.

மேற்குறித்த மூன்று முனைகளில் அர்த்தமுள்ள வகையில் பொறுப்புக் கூறலை முன்னெடுப்பதிலும் மீள் நிகழாமையை உறுதிப்படுத்துவதிலும் பெருந்தொகையாகப் புலம்பெயர்ந்து ஈழத்தமிழர்கள் வாழும் நாடுகளில் முதன்மையான நாடான கனடா நாடானது பின்வரும் வழிகளில் காத்திரமாக உதவ வேண்டும் என்று அனைத்து ஈழத்தமிழர் மற்றும் தமிழ் பேசும் மக்கள் சார்பாகவும் வேண்டி நிற்கின்றேன்.

ஐ.நா.மனித உரிமை ஆணையாளரின் அண்மைய அறிக்கையிள் பிரேரித்திருப்பவையும் இங்கு நான் முன்வைக்கும் கோரிக்கைகளை மேலும் வலுப்படுத்தும் உசாத்துணையாக அமைந்துள்ளன என்பதையும் தங்களுக்கு எடுத்துக் காட்ட விரும்புகின்றேன். இவ்வகையில், அர்த்தமுள்ள பொறுப்புக்கூறல் தொடர்பாகத் தங்களின் தயவான பார்வைக்கு நான் முன்வைக்கும் கோரிக்கைகள் வருமாறு:-

1.தலையாய பொறுப்புக்கூறலுக்குரிய தமிழ் இன அழிப்புக் குற்றம் தொடர்பான இலங்கையின் அரச பொறுப்பை விசாரணைக்கு உட்படுத்துமாறு உலக நீதிமன்றை அணுகுதல்.

மியான்மார் நாட்டில் றொஹின்யா



மக்கள் மீது இன அழிப்பு மேற்கொண்டதில் மியான்மார் அரசுக்குப் பொறுப்பு உள்ளதா என்பதை உலக நீதிமன்று விசாரிக்க வேண்டும் என்று வழக்குத் தொடர்வதற்கு கனடா நாடு அனுசரணையாக இருந்துள்ளது பாராட்டத்தக்கது. அது மட்டுமன்றி, தனதுநாட்டிலேயேவாழுகின்ற பூர்வகுடிகள் மீது முற்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட

06

## இலங்கையின்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி..)

குற்றங்களையும் இன அழிப்பு என்று ஏற்றுக்கொண்டு அதற்குப் பரிகார நீதியை வழங்க கனடா நாடு முற்படுகின்றமை முன்மாதிரியானது.

கனேடிய ஈழத்தமிழர்கள் தமக்குரிய இரண்டாம் தாயகமாக வரித்துக்கொண்டுள்ள தங்கள் அரசிடம், தமது தாயகத்தில் பாதிக்கப்பட்ட தரப்பாக, அந்தப் பாதிப்போடு கனடாவிலும் தமது வாழ்க்கையைத் தொடர்கின்றவர்களாக, தாயகத்தில் ஈழத்தமிழர் மீதான இன அழிப்புத் தொடர்பான இலங்கை அரசின் பொறுப்பை உலக நீதிமன்றில் விசாரிக்க உதவுமாறு வேண்டி நிற்கின்றார்கள். இது தொடர்பாக கனடிய நாடாளுமன்றில் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள இரண்டு மனுக்களையும் முழுமையாகக் கருத்தில் எடுத்து அடுத்த கட்ட நடவடிக்கையை உலக நீதிமன்றம் நோக்கி முன்னெடுக்க ஆவன செய்யுமாறு கனேடிய அரசை, குறிப்பாக வெளிநாட்டமைச்சை வேண்டுகின்றேன்.

இது தொடர்பாக கனடாவில் வாழும் ஈழத்தமிழர்களின் பலதரப்பட்ட அமைப்புகளும் அடிமட்ட செயற்பாட்டாளர்களும் செயற்பட்டுவந்துள்ளார்கள் என்பதோடு, இவை பற்றி தொடர்ச்சியாக தாயகத்திலிருக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் அறியத்தந்து கொண்டிருக்கின்றார்கள்.

2. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கையாளப்படும் இதர குற்றங்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க முயற்சிகளில் உயர் கட்டத் தரமுயர்த்தலை எதிர்வரும் 60 ஆம் கூட்டத் தொடரோடு மேற்கொள்ளுதல்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் தொடர்பான இறுதியாக மேற்கொள்ளப் பட்டுள்ள தீர்மானம் 51/1 (06 ஒக்டோபர் 2022) மேலும் நீடிக்கப்பட்டு, அதன் அடுத்த கட்டமாக 58 ஆம் அமர்வில் (பெப்ரவரி - ஏப்ரல் 2025) வாய்மூல அறிக்கையிடலையும், 60 ஆம் அமர்வில் (செப்டெம்பர் - ஒக்ரோபர் 2025) எழுத்துமூல அறிக்கையிடலையும் மேற்கொள்ளுமாறு மனித உரிமை உயர் ஆணையாளரையும் பேரவைப் பொறிமுறையையும் பணித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் பல ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் தீர்மானங்களும், அவை தொடர்பான நடவடிக்கைகளும், அறிக்கையிடல்களும் இலங்கைத் தீவில் இடம்பெற்ற சர்வதேசக் குற்றங்கள் தொடர்பான கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளபோதிலும், இலங்கை மீது தொடர்ச்சியாக அழுத்தங்களை மேற்கொண்டு வந்துள்ள போதிலும், பொறுப்புக்கூறல் தொடர்பில் இலங்கையில் மாறி மாறி ஆட்சிப்பீடம் ஏறி வரும் அரச தரப்பினர் அவ்வப்போது வாக்குறுதிகளை வழங்கிவிட்டு அவற்றை மீளப் பெற்றுள்ள அரசியல் விருப்பற்ற கண்துடைப்பு நடவடிக்கைகளே தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

விளைவாக, காலநீடிப்பும் அரசியல் வெளியும் இலங்கை அரசுக்கு தொடர்ந்து வழங்கப்படுவதே நடைபெற்றுள்ளது. இதனால், பாதிக்கப்பட்ட மக்கள் விசனமடைந்துள்ளார்கள். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக உருவாக்கப்பட்ட அலுவலகப் பொறிமுறையிலும் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளார்கள். ஆகவே, இனியும் இலங்கை அரசுக்குக் கால நீடிப்பும் அரசியல் வெளியும் வழங்காது, பொறுப்புக்கூறல் தொடர்பான குற்றவியல் பொறுப்புத் தொடர்பான சர்வதேச விசாரணையை நோக்கி அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் விதத்தில் அடுத்த தீர்மானத்தில் தகுந்த தரமுயர்த்தல் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது எமது மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. இலங்கை தொடர்பான தீர்மானங்களைப் பிரேரிக்கும் மையக் குழு நாடுகளிடம் இந்தத் தரமுயர்த்தலை நாம் வேண்டி நிற்கின்றோம்.

நீண்ட காலமான இழுத்தடிப்பானது காலங்கடந்த நீதி மறுக்கப்பட்ட நீதி என்றாகிவிடும் நிலையைத் தோற்றுவித்துள்ளது. உலகில் ஏற்படும் ஸ்திரமின்மையும் உலக ஒழுங்கு மாற்றங்களும் மேலும் நீர்த்துப்போகச் செய்யும் சூழலை ஏற்படுத்திவிடுமோ என்று எமது மக்கள் அஞ்சுகின்றார்கள். ஆதலால், இலங்கை தொடர்பான தீர்மானத்தை இனிமேலும் இரண்டாம் நிகழ்ச்சி நிரலுக்குள் கையாளுவதற்குப் பதிலாக, தரமுயர்த்தப்பட்ட நான்காம் நிகழ்ச்சி நிரலுக்குள் கையாளுவது மேலும் பொருத்தமாக இருக்கும் என்பது எமது அபிப்பிராயம்.

அதேவேளை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள சாட்சியங்களைச் சேகரித்துப் பேணும் பொறிமுறையை ஒரு முழுமையான "சர்வதேச பக்கச்சார்பாற்ற சுயாதீனப் பொறிமுறையாகத் தரமுயர்த்துவது மேலும் சிறப்பாக அமையும்.

போர்க்குற்றங்கள், மனிதத்துவத்துக்கெதிரான குற்றங்கள் போன்றவற்றுக்கும் மேற்சென்று இன அழிப்புக் குற்றங்கள் தொடர்பான குறிப்பான நோக்கு, தாக்குதல்கள் தொடர்பான சாட்சிகளையும் சாட்சியப் பொறிமுறை உள்ளடக்கும் வகையில் அது தரமுயர்த்தப்பட்டால் மேலே குறிப்பிடப்பட்ட முதலாம் கோரிக்கைக்குத் தேவையான சாட்சிகளைத் திரட்டுவதற்கும் அது பெரும் உதவியாக அமையும். இது குறித்த ஆய்வெல்லையைத் தரும் வகையில் அடுத்த தீர்மானம் அமையவேண்டும் அல்லது அதற்கேற்ற உண்மைகளைக் கண்டறியும் ஆணையத்தை நியமிக்க வேண்டும்.

அதேவேளை, ஐ.நா. பாதுகாப்புச் சபையும், பொதுச்சபையும், பொதுச் செயலாளரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல், சர்வதேச விசாரணை குறித்து தீர்க்கமான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஐ.நா. மனித உரிமைகள் பேரவை பரிந்துரைக்க வேண்டும் என்றும் எமது மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் தனது நட்பு நாடுகளின் ஊடாக கனடா இதற்கு ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் எனது மக்கள் சார்பாக வேண்டிக்கொள்கின்றேன்.

3. புதிய அரசமைப்பு காத்திரமாக மேற்கொள்ளப்படுவதற்குரிய புதுமையான சர்வதேச மத்தியஸ்துவத்தை ஏற்படுத்த ஆவன செய்தல்.

புதிய அரசமைப்பு ஒன்றின் ஊடாக இனப் பிரச்சினைக்கான தீர்வு காணப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை தென்னிலங்கையின் பிரதான கட்சிகள் பெரும்பாலும் ஒத்துக்



கொண்டிருந்தாலும், அரசமைப்பு ஒன்று உருவாக்கப்படுகின்றபோது, அது மீண்டும் இறுக்கமான ஒற்றையாட்சித் தன்மை கொண்ட ஒன்றாக அமைந்துவிடும் ஆபத்து உள்ளது என்ற அச்சம் பரவலாகத் தமிழ் மக்களிடையே வேரூன்றியுள்ளது. கடந்த கால அனுபவத்தோடு நோக்குகையில் இது நியாயமான அச்சமே.

இவ்வாறான சிக்கலுக்கு மீண்டும் மீண்டும் நாம் ஆளாகாது இருக்கவேண்டுமாயின் தீவிலுள்ள தத்தமக்கான இறைமைக்கும் முழுமையான சுயநிர்ணய உரிமைக்கும் பரிகார நீதிக்கும் உரித்துடைய தேசங்களுக்கும் ஏனைய மக்களுக்கும் இடையே கூட்டு உரிமைகளை உறுதிப்படுத்தும் அரசமைப்புக்கு முன்னரான சமூக ஒப்பந்தம் ஒன்று சர்வதேச மத்தியஸ்தத்தோடு மேற்கொள்ளப்பட்டு, அதன் தொடர்ச்சியாக அரசமைப்பு உருவாக்கப்படுவதே பொருத்தமாக இருக்கும்.

இது தொடர்பில் கனடா முன்னுதாரணமான ஆட்சிமுறையைக் கொண்ட ஒரு நாடாக விளங்குகிறது. கியூபெக் மாகாணத்தின் ஒரு தலைப்பட்சமாகப் பிரிந்து செல்லும் உரிமை தொடர்பாக 1998 ஆம் ஆண்டு கனடிய உச்ச நீதிமன்ற தீர்ப்பு வெளியாகிய பின்னர் தெளிவுபடுத்தற் சட்டம் என்பதை 2000 ஆம் ஆண்டில் கொண்டுவந்து கூட்டாட்சி அலகுகளான மாகாணங்களுக்கான சுயநிர்ணய உரிமையின் பாற்பட்ட பொதுவாக்கெடுப்பை எவ்வாறு நடாத்தவது என்பதைத் தெளிவுபடுத்திய அரசியலமைப்பைக் கொண்டுள்ளது. இந்தவகையில் கனடா நாட்டின் கூட்டாட்சி முறை எமக்கு நம்பிக்கை தரும் ஒரு முன்னுதாரணம் ஆகும். இதைப் போன்ற ஒரு தீர்வை இலங்கைத் தீவிலும் ஏற்படுத்தும் வகையில் ஊக்கமூட்டும் சர்வதேச ஒழுங்குகளைக் கனடிய அரசு ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் பணிவோடு வேண்டுகின்றேன்.

07

# கலாநிதி பட்டத்தை ஆற்றில் வீசிவிட்டேன்

## மேர்வின் சில்வா விளாசல்



"எனக்கு வழங்கப்பட்டது கௌரவ கலாநிதி பட்டமாகும். தற்போது அனைவருக்கும் பணத்துக்குப் பட்டம் வழங்கப் படுவதால் எனக்கு வழங்கப்பட்ட கலாநிதி பட்டத்தை ஆற்றில் வீசிவிட்டேன்."

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"போலிக் கல்வித் தகைமைகளைக் காண்பித்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவான அனைவரையும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பதவி நீக்க வேண்டும். அப்போது அவரது பெயர் வரலாற்றில் இடம்பெறும். அதுமட்டுமல்ல லீ குவான் மறுபடியும் பிறந்துவிட்டார் என மக்கள் கொண்டாடுவார்கள். அவ்வாறு இல்லாவிட்டால் மக்களின் செல்வாக்கை அநுர இழக்க நேரிடும்.

எனக்கு கௌரவ கலாநிதி பட்டமே வழங்கப்பட்டது. அது மட்டுமல்ல தேசமான்ய, தேசபந்து உள்ளிட்ட பட்டங்களும் வழங்கப்பட்டன. ஆனால், கலாநிதி பட்டம் காசுக்கு வழங்கப்படுவதாக விமர்சனம் எழுந்த பின்னர் அத்தனை பட்டங்களையும் ஆற்றில் வீசிவிட்டேன். தற்போது கரப்பான் பூச்சி, பள்ளி என்பவற்றுக்கு மட்டும்தான் பட்டம் வழங்கப்படாமல் உள்ளது."

– என்றார்.

---

### இலங்கையின்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி..)

நல்லிணக்க நடவடிக்கைகளையும் பொருளாதார ரீதியான முன்னெடுப்புகளையும் ஒன்றோடு ஒன்று இணைந்ததாகப் புலம்பெயர் ஈழத்தமிழர்கள் தமது பூர்வீகத் தாயகத்தோடு மேற்கொள்வதற்கு ஏதுவாக மேற்குறித்த பொறுப்புக்கூறல், அரசியல் தீர்வு ஆகியன இன்றியமையாத முதற்கட்ட நடவடிக்கைகள் என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன். அவர்களின் மகிழ்வான உள நலத்துக்கும் இது நன்மை பயக்கும். பொறுப்புக்கூறலும் அநீதிகள் மீளநிகழாமையும் உறுதிப்படுத்தப்பட்டாலே உரிமையோடு அடுத்த கட்ட பொருளாதார நல்லிணக்க நகர்வுகள் ஆரோக்கியமாக இடம்பெறும் சூழல் எமது தீவில் உருவாகும் என்பதையும் தங்கள் மேலான கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன். தங்களைச் சந்தித்து இந்தக் கோரிக்கைகளைக் கையளிக்கும் வாய்ப்பை எனக்கு அளித்தமைக்கு கனடிய வெளிவிவகார அமைச்சுக்கு மன நிறைவோடு எனது மனமார்ந்த நன்றிகள்." – என்றுள்ளது.

---

### புதிய அரசமைப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளமையை முன்னிட்டு மஹரக இந்திரா புற்றுநோய் ஒழிப்பு அமைப்புக்கு நிவாரணங்களை வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புதிய அரசமைப்பை உருவாக்கி தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுத்தமையை இன்று பலரும் மறந்துள்ளனர். இதற்காக 21 கூட்டங்களை அவர் நடத்தியிருக்கின்றார். அவற்றில் நானும் பங்கேற்றிருக்கின்றேன். அந்த அரசமைப்புக்கு எந்தவொரு அரசியல்வாதியும் எதிர்ப்பை வெளியிடவில்லை.

அன்று அந்த அரசமைப்பு நிறைவேற்றப்பட்டிருந்தால் இன்று நாடு எந்த நிலைமையில் இருந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க முடியும்.

அவ்வாறான புரட்சிகரமான மாற்றத்தைப் பொருளாதார மற்றும் சமூக ரீதியில் ஏற்படுத்தியிருக்க முடியும். ஆனால், அந்த முயற்சி நிறைவேறாது போனமை எமது நாட்டின் துரதிஷ்டமாகும். புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தற்போதாவது அதனை செய்வார் என்று நம்புகின்றோம்." – என்றார்.

இதன்போது கருத்து வெளியிட்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க,

"கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற தற்கொலைக் குண்டு தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 6 பேர் எனது பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்தவராவார். அன்று உயிரிழந்தவர்களை நினைவுகூர்வதற்காக இந்த நிகழ்வு வருடாந்தம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நோயாளர்களில் அதிகளவில் பாதிக்கப்படுவது புற்றுநோயாளர்கள் என்பதால்தான் இந்த வைத்தியசாலையைத் தேர்ந்தெடுத்திருக்கின்றோம்.

கடந்த 14 ஆண்டுகளுக்கு முன்னர் நானும் புற்றுநோய்க்குள்ளாகி அதிலிருந்து மீண்டிருக்கின்றேன். அந்தவகையிலேயே நாம் இணைந்து இந்த பணியை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம். பல தசாப்தங்கள் அரசியலில் ஈடுபட்டு தற்போது அதனை வெறுத்து அதிலிருந்து ஒதுங்கியுள்ளோம். அரசியலிலிருந்து ஓய்வெடுத்த பின்னர் நானும் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவும் மாத்திரமே மக்களுக்கான சேவைகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

எமது நிதியங்களில் சுயமாக வந்து பணியாற்றுவதற்குச் சகலருக்கும் வாய்ப்புள்ளது. நாட்டில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் அதிலிருந்து மீண்டு ஆரோக்கியமான வாழ்க்கைக்குத் திரும்புவதற்கான பணிகளை நாம் தொடர்ந்தும் முன்னெடுப்போம்." – என்றார்.

---

### முஸ்லிம் காங்கிர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மையகமான தாருசலாமில் நடைபெறவுள்ளது.

கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் சமகால நிலைமைகள் மற்றும் கட்சியின் அடுத்த கட்டச் செயற்பாடுகள் சம்பந்தமாக ஆராயப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

விசேடமாகக் கட்சிக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தல், உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான தயார்ப்படுத்தல்களை மேற்கொள்ளுதல், அரசின் செயற்பாடுகள் மற்றும் அவை தொடர்பான கட்சியின் நிலைப்பாடுகள் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாக ஆராயப்படவுள்ளன என்று தெரியவருகின்றது



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அதே பல்லவி!

இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் புதுடில்லி விஜயம் முடிவுக்கு வந்துவிட்டது.

இனி அவர் அடுத்து மேற்கொள்ள உள்ள சீன விஜயம் பற்றி பரபரப்பாகப் பேசப்படும்.

இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயம் கொழும்பில் பிரதான பேசு பொருளாக ஆராயப்படுகின்றது. ஏதோ ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவுக்கு முன்னர் எந்த இலங்கைத் தலைவர்களுக்கும் இல்லாத பெரு வரவேற்பு வழங்கப்பட்டமை போன்றும் இரு தரப்பு பேச்சுக்களில் இணக்கமான பல புதிய விடயங்கள் எட்டப்பட்டிருக்கின்றன என்ற மாதிரியும் செய்திகள் வெளியிடப்பட்டாலும் பேச்சில் அப்படி ஒன்றும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் இல்லை என்பதுதான் பெறுபேறாக வெளிப்படுகின்றது.

ஏற்கனவே இருதரப்பு இடையிலான உறவு முறைகளில் நடைமுறையில் உள்ள வரைபடத்தை அப்படியே மீண்டும் உறுதிப்படுத்துவதாகவே இந்த விஜயம் அமைந்தது என்பதை இருதரப்பினாலும் பேச்சுத் தொடர்பில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

இப்போதைய கூட்டறிக்கையில், முன்னர் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு விஜயம் செய்த போது இணக்கம் காணப்பட்ட விடயங்களைத் தவிர புதிதாக எதையும் அவதானிக்க முடியவில்லை.

இந்தக் கூட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ள பல விடயங்கள் நீண்ட காலமாக இருதரப்பு உறவாடல்களில் முக்கிய கருத்தியல் மட்டத்தில் இருப்பவைதான்.

இரு நாடுகளுக்கும் இடையில் உயர் அழுத்த மின் இணைப்பு என்பது ஏற்கனவே பேசப்பட்ட விடயம். கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் இந்தியாவுக்கான இலங்கையின் தூது வர் மிலிந்த மொறகொட இருதரப்பு உறவுகளை முன்னோக்கி நகர்த்துவதற்காகக முன்வைத்த அறிக்கையில் விவரித்த விடயம்தான்.

இரு நாடுகளையும் இணைக்கும் பெட்ரோலிய குழாய் இணைப்பு பற்றிய விடயமும் ஏற்கனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தின் பின்னர் அப்போதைய கூட்டறிக்கையில் வந்ததுதான்.

அடுத்தது, திருகோணமலை எண்ணெய் தாங்கிகளைப் பயன்படுத்தி அங்கு எரிசக்தி மையம் அபிவிருத்தி செய்வது என்பது. அது கூட 2015 இல் நல்லாட்சி அரசின்காலத்தில்பிரதமர்மோடி இலங்கைக்கு விஜயம் செய்த போது பகிரங்கமாக விவாதிக்கப்பட்ட விடயமே. அவர் இலங்கை நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் இந்த யோசனை இருந்தது.

ஆக, இந்தத் தடவை கூட்டறிக்கையில் இடம்பெற்றிருக்கும் பல விடயங்கள் ஏற்கனவே பலமுறை பேசப்பட்ட அம்சங்கள்தான். புதிதாக எவையும் இல்லை.

குறிப்பாக இலங்கையையும் இந்தியாவையும் தரைவழியாக இணைக்கும் திட்டம் பற்றி இம்முறை குறிப்பிடப்படவில்லை. அதேபோல 13 ஆவது திருத்தத்தை ஈண்டு குறிப்பிடும் இந்தியப் போக்கு இம்முறை இல்லை. மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் அம்சத்திலும் காத்திரமான முன் நகர்கவு பற்றிய கோடி காட்டல் எதுவும் வெளிப்படுத்தப்படவில்லை.

வழமை போல இந்தியப் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கும் நடவடிக்கைகளில் இலங்கை இறங்காது என்ற உறுதிமொழி வழங்கப்பட்டு இருக்கின்றது.

மொத்தத்தில் இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் புதுடில்லி விஜயமும் அதன் பெறுபேறான - முடிவான - கூட்டறிக்கையும் பழைய பல்லவிதான், தவிர வேறில்லை.






# பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நேற்று சிறப்பாக நடைபெற்ற ஒளிவிழா

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் 2024ஆம் ஆண்டுக்கான ஒளிவிழா நிகழ்வு பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் தலைவரும் கணக்காளருமான ம.சிவகுமாரனின் தலைமையில் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

நத்தார் தீப ஒளியூட்டலுடன் ஆரம்பமான நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக பருத்தித்துறை அஞ்சலியக இயக்குநர் அருட்பணி ஞா.வென்சஸ்லோஸ் கலந்துகொண்டதுடன் கிறிஸ்மஸ் நற்செய்தியையும் வழங்கினார்.

மேலும் கௌரவ விருந்தினர்களாக மெதடிஸ்த திருச்சபை குரு முதல்வர் அருட்பணி றிச்சட் ஜோதி சொரூபன் மற்றும் பருத்தித்துறை மறைக்கோட்ட மறையாசிரியர் அ.ம.ஜெயசீலன் ஆகியோரும், சிறப்பு விருந்தினராக நலன்புரிச் சங்கத்தின் போசகரும் பிரதேச செயலாளருமான சிவபாதசுந்தரம் சத்திய சீலனும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சிறுவர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

சிறுவர்களின் கலை நிகழ்வுகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் கரோல் கீதங்கள், பாடல்கள் இடம்பெற்றதுடன், நத்தார் தாத்தா வருகையுடன் சிறுவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டு கிறிஸ்மஸ் நத்தார் இசையுடன் விழா சிறப்பாக இனிதே நிறைவு பெற்றது.



















# இலங்கையுடனான உறவை மேலும் வலுப்படுத்தத் தயாராகின்றது சீனா

## ஜனாதிபதி அநுரகுமார நன்றி தெரிவிப்பு



கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியமை மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கைக்குக் கடன் பெற்றுக்கொடுத்தமைக்காக சீன அரசுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நன்றி தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் சீன மக்கள் குடியரசின் அரசியல் ஆலோசனைக் சம்மேளன தேசியக் குழுவின் உப தலைவர் கின் பொயோங் ஆகியோருக்கிடையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படும் நீண்டகால உறவுகளை மேலும் வலுப்படுத்தி, புதிய அரசுடன் தொடர்ந்தும் செயற்பட எதிர்பார்த்திருப்பதாகவும் கின் பொயோங் தெரிவித்தார்.

அதேபோல் நாட்டின் அனர்த்த நிலைமைகளின்போது உதவிகளை வழங்கியமை மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகளை வழங்கியமைக்காகவும் நன்றி கூறிய ஜனாதிபதி, சீன அரசின் ஒத்துழைப்பைத் தொடர்ந்தும் எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.


இடைநடுவில் நிறுத்தப்பட்டிருக்கும் மத்திய அதிவேக வீதியில் சீனாவுக்குப் பொறுப்பான பகுதிகளை நிறைவு செய்ய வேண்டுமென வலியுறுத்திய ஜனாதிபதி, கொழும்புத் துறைமுக நகரம் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டத்தை மையப்படுத்தி விநியோக மத்தியஸ்தானம் மற்றும் நிறுவன வேலைத்திட்டங்களை விரைவாக ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

குறித்த வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கவும், பல்வேறு காரணங்களுக்காக இடைநடுவில் நிறுத்தப்பட்டிருக்கும் சமுத்திர ஆய்வுப் பணிகளை மீள ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாகவும் உப தலைவர் இதன்போது கூறினார்.

அத்தோடு, அம்பாந்தோட்டை முதலீட்டு வலயத்தை அண்மித்து சீன நிறுவனங்களை அமைத்து உலக அளவில் இலங்கைக்கு மிகச் சிறந்ததொரு பிரவேசத்தை ஏற்படுத்தித் கொடுக்க எதிர்பார்த்திருப்பதுடன், எதிர்வரும் காலங்களில் சீனாவுக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவிருக்கும் ஜனாதிபதியை வரவேற்பதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், பிரதி சபாநாயகர் வைத்தியர் ரிஷ்வி சாலி, சீன மக்கள் குடியரசின் அரசியல் ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் மா யூசியாங் ஆகியோர் இதன்போது கலந்துகொண்டனர்.

# யாழ். போதனா வைத்தியசாலைக்குள் காவலாளியைக் காயப்படுத்தியர் கைது



Acknowledgement of Complaint

Police Station: Jaffna

Date: 2024/12/19

Name of Complainant: V. Sajanraj

Nature of Complaint: An Assault

I. B. Reference: CIB (01) 241/195

Signature of Recording Officer:

Name Rank & Reg. No. of Recording Officer: S. Kabilan PC 87989

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் மது போதையில் நுழைந்த நபர், காவலாளியைக் கடித்துக் காயப்படுத்திய சம்பவம் நேற்று இடம்பெற்றது.

மதுபோதையில் நோயாளர் விடுதிக்குள் நுழைய முற்பட்டவரை வைத்தியசாலை காவலாளி தடுக்க முற்பட்டபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

35 வயது மதிக்கத்தக்க மேற்படி நபர் காவலாளிகளால் பிடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

காயமடைந்த காவலாளி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை விடுதியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மதுபானசாலை அனுமதிப்பத்திர விவகாரத்தில் தற்போதைய அரசுக்கும் லஞ்சம் வழங்கப்பட்டதா?

## முன்னாள் எம்.பி. சுமந்திரன் கேள்வி




(எஸ்.ரகுதீஸ்)

“மதுபானசாலை அனுமதிப்பத்திர விவகாரத்தில் அரசியல் லஞ்சம் வழங்கப்பட்டதாக கூறிவிட்டு இப்பொழுது, அந்த விடயத்திலிருந்து பின்வாங்குவது, இந்த அரசாங்கம் மீதும் ஊழல் தொடர்பில் பாரிய சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.”

– இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில்நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்த வருடத்தில் 361மதுபான சாலை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருப்பது தொடர்பாக அரசாங்கம் நாடாளுமன்றத்தில் ஒரு தகவலை வெளியிட்டுள்ளது. ஆனால் இந்த அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு முன்னதாக, இவ்வாறான மதுபான சாலை உரிமைப்பத்திரங்கள் வழங்குவதில் அரசியல் லஞ்சம் இருப்பதாக சொல்லியிருந்தார்கள்.

அப்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த பலரது சிபாரிசின் அடிப்படியில் ஏராளமான மதுபானசாலைகளுக்கான உருமைப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என சொல்லியிருந்தார்கள்.

அந்த அரசியல் லஞ்சம் என்ற விவகாரத்தில் தங்கள் பதவிக்கு வந்து மூன்று நாள்களில் வெளிப்படுத்துவோம் என்றும் கூறியிருந்தார்கள்.

ஆனால், இரண்டு, மூன்று மாதங்கள் ஆகியும் யார் யாருக்கு உரிமை பாத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை மாத்திரம்தான் வெளிப்படுத்தியுள்ளனர். இது அனைவருக்கும் ஏற்கனவே தெரிந்த விடயம்தான்.

யாருடைய சிபாரிசில் இந்த உரிமை பாத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை வெளிப்படுத்தினால் தான், அரசியல் லஞ்சம் வழங்கப்பட்டமை என்பதை உறுதி செய்யமுடியும்.

ஆகவே, லஞ்சம், ஊழல் அனைத்தையும் முற்றுமுழுதாக ஒழித்துவிடுவோம் என்று கூறி பதவிக்கு வந்த இந்த அரசாங்கம். மதுபானசாலை அனுமதிப்பத்திர விடயத்தில் சுற்றுப் பின்வாங்குவதாக தோன்றுகிறது.

எமது பிரதேசங்களை பொறுத்தவரை 9 ஆவது நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்த இருவர் தாங்களாகவே சிபாரிசு செய்தோம் என்பதை ஒத்துக்கொண்டுள்ளனர்.

ஆனால், ஒவ்வெரு மதுபானசாலைகளும் யாரோ ஒரு அரசியல்வாதியின் சிபாரிசின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது என்பதை, அரசாங்க கட்சியே தேர்தலுக்கு முன்னர் குற்றஞ்சாட்டியிருந்தது.

அப்படியானால், அந்த பெயர் பட்டியலை அரசாங்கம் வெளியிடவேண்டும். இதுவொரு பாரதூரமான விடயம். இதனை நாங்கள் தொடர்ச்சியாக கூறிவருகின்றோம்.

முக்கிய முறைப்பாடு ஒன்றை தேர்தலுக்கு முன்னர் கூறிவிட்டு, அதாவது அரசியல் லஞ்சம் வழங்கப்பட்டதாக கூறிவிட்டு இப்பொழுது அந்த விடயத்திலிருந்து பின்வாங்குவது, இந்த அரசாங்கம் மீதும் ஊழல் தொடர்பான பாரிய சந்தேகம் ஒன்றை எழுப்புகின்றது. இவர்களுக்கும் லஞ்சம் கொடுத்து இந்த தகவல்கள் மறைக்கப்படுகின்றனவா என்ற கேள்விகள் எழுகின்றன.”– என்றார்.

# வடமராட்சியில் விலங்குகளின் இரத்த மாதிரிகள் பெறப்பட்டன





(எஸ்.ரகுதீஸ்)

யாழ்ப்பாணம், வடமராட்சி கரவெட்டி மற்றும் பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்றைய தினம் (19) விலங்குகளிலிருந்து இரத்த மாதிரிகள் பெறப்படும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அண்மைக் காலமாக எலிக் காச்சல் நோயால் பாதிக்கப்பட்ட பலர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். சிலர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில், எலிக் காச்சல் விலங்குகளில் இருந்து பரவி இருக்கலாம் என்ற அச்சத்தில், தொற்றுநோயியல் பிரிவின் அறிவுறுத்தலுக்கு அமைய விலங்குகளிலிருந்து இரத்த மாதிரிகள் பெறப்பட்டன.

கண்டி பெரதேனியாவிலிருந்து வருகைதந்த விலங்கியல் பிரிவினர் எலிக் காச்சல் நோயால் உயிரிழந்தவர்களின் வீடுகளுக்குச் சென்று, சுற்றுச் சூழல் பகுதிகளை ஆய்வு செய்ததுடன், அந்த பகுதிகளில் உள்ள விலங்குகளில் இருந்து இரத்த மாதிரிகளையும் பெற்றுக்கொண்டனர்.

இவர்களுடன் கிளிநொச்சி விலங்கியல் தொற்றுநோய் பிரிவின் புலனாய்வு பிரிவினரும் இணைந்து இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.



# இஸ்ரேலின் தாக்குதலில் 32 பலஸ்தீனியர்கள் பலி!

காசா மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில், கடந்த 24 மணி நேரத்தில் சிறுவர்கள் உட்பட 32 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என காசாவின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, கிழக்கு காசா நகரத்தில் இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் இரண்டு முகாம்கள் மீது இஸ்ரேல் தாக்குதல்களை நடத்தியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

காசா மீதான இஸ்ரேலின் போரில் ஆரம்பம் முதல் 45,129 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், ஒரு லட்சத்து 7,338 பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, ஹமாஸ் தலைமையிலான தாக்குதல்களின் போது இஸ்ரேலில் 1,139 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 200 இற்கும் மேற்பட்டோர் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்டுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.









# நைஜீரியாவில் சமய நிகழ்வில் ஏற்பட்ட சன நெரிசலில் சிக்கி பலர் உயிரிழப்பு

நைஜீரியாவில் இடம்பெற்ற சமய நிகழ்வொன்றில் ஏற்பட்ட சன நெரிசலில் சிக்குண்டு பலர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நைஜீரியாவின் தென்மேற்குப் பகுதியில், ஓயோ மாநிலத்தில் உள்ள இஸ்லாமிய உயர்நிலைப் பாடசாலை ஒன்றிலே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இந்தச் சம்பவத்தில் பலர் காயமடைந்துள்ள நிலையில், அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என குறிப்பிடப்படுகிறது.

நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கும், பங்கேற்பாளர்களை அந்த இடத்திலிருந்து வெளியேற்றுவதற்கும் பாதுகாப்புப் படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என மாநில ஆளுநர் சேய் மகிண்டே தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்குவதற்குக் குழுவொன்று அனுப்பப்பட்டுள்ளதாக நைஜீரியாவின் தேசிய அவசரச் சேவைகள் தெரிவித்துள்ளது.







# தேர்தல் காலத்து வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும்

## ஹிஸ்புல்லாஹ் எம்.பி. சபையில் வலியுறுத்து



(எஸ்.சினீஸ் கான்)

"ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் பொருள்களின் விலைகளை குறைப்போம், மின்சாரக் கட்டணங்கள் மற்றும் எரிபொருள்களின் விலைகளை குறைப்போம் என்று பல்வேறு விடயங்களை சொல்லி ஆட்சிக்கு வந்த அரசாங்கம், ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல்கள் நிறைவடைந்தும் பொருள்களின் விலையை குறைத்ததாக நாம் அறியவில்லை. மாறாக, அரிசி, தேங்காய் மற்றும் சில பொருள்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து செல்கின்றன. விலைகளை குறைக்க முடியாத நிலையில் அரசாங்கம் திண்டாடுகின்றது.

– இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரித்தார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் –

அரசாங்கம் பொருள்களின் விலைகளைக் கூட்டி நாட்டினுடைய பொருளாதாரச் சுமையை மக்கள் மீது சுமத்தாமல், தாம் தேர்தல் காலங்களில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். அதேபோன்று அத்தியவசியமான உணவுப் பொருள்களின் விலைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து மக்கள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்வதற்குரிய நிலையினை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும்.

அஸ்வெசும திட்டத்தின் ஊடாக அரச ஊழியர்களுக்கும் ஆறாயிரம் ரூபா வட்டியில்லாத கடனாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் கிழக்கு மாகாணத்தில் – குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் – மரங்கள் விழுந்து சேதமடைந்த நிலையில் பல பாடசாலைகளை நடத்த முடியாத நிலை காணப்படுகிறது அதே போல் பல வீதிகளும் சேதமடைந்து காணப்படுகின்றன.

அதற்கான நிதியினை மாகாண சபையில் நிதிப்பற்றாக்குறை காரணமாக பெற முடியாமல் இருப்பதால் மத்திய அரசாங்கத்தின் ஊடாக அதற்கான நிதியினை வழங்கி பாடசாலை, வீதிகளை புனரமைப்பு செய்யும் நடவடிக்கைகளை அரசாங்கம் விரைவுபடுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

– என்றார்.



## கிழக்கு பல்கலை உபவேந்தராக இருந்த

# ரவீந்திரநாத் கடத்தி காணாமலாக்கப்பட்டமை; கருணாவை அழைத்து சி.ஐ.டியினர் விசாரணை

(கனகராசா சரவணன்)

கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடந்த 2006 ஆம் ஆண்டு கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்டமை தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று வியாழக்கிழமை கருணா அம்மான் என்று அழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளீதரன் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு டிசம்பர் 15ஆம் திகதி கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் கொழும்பில் இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கக் கூட்டத்தில் கலந்து கொண்டு விட்டு மட்டக்களப்பு நோக்கி திரும்பிக் கொண்டிருந்த போது இனம் தெரியாத ஆயுததாரிகளால் கடத்தப்பட்டுப் பின்னர் காணாமலாக்கப்பட்டார்

இந்த சம்பவம் தொடர்பாக சி.ஐ.டியினர் விசாரணை மேற்கொண்டுவரும் நிலையில் கருணா அம்மானை அவர்கள் விசாரணைக்கு அழைத்தனர். அவர் நேற்றுக் கொழும்பிலுள்ள சி.ஐ.டி அலுவலகத்துக்குச் சென்று வாக்குமூலம் வழங்கிவிட்டு வெளியேறியுள்ளார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கருணா அம்மான் தம்மிடம் உபவேந்தர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பாக விசாரணை செய்து வாக்குமூலம் பெறப்பட்டதாகத் தெரிவித்தார்.



# இமையாணனில் மதுசாலை அமைத்தலுக்கு எதிரான வழக்கில் பொதுமக்களின் சார்பில் சுமந்திரன் ஆஜர்

உடுப்பிட்டி , இமையாணன் மேற்கில் புதிதாகத் திறக்கப்பட்ட மதுபான சாலையை அகற்றக்கோரி அந்தப் பகுதியை சேர்ந்த 32 பொது அமைப்புக்கள் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் பொன்னுத்துரை கிருசாந்தன் முன்னிலயில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடந்த மே மாதம் 5 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் வழக்காளிகளாக பொது அமைப்புக்கள் சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையானார்.

நேற்று குறுக்கு விசாரணைக்காக வழக்கு எடுக்கப்பட்ட போது மதுபான சாலை அமைத்ததற்கான தன் நிலையை குறித்த மதுபானசாலை உரிமையாளர் நீதிமன்றத்தில் விளக்கினார். உரிமையாளர் சார்பாக மற்றொரு சாட்சியம் அடுத்த தவணையின் போது அளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனுடன் சட்டத்தரணிகளான மயூரன், சந்திரசேகரம், பெனிஸ்லஸ் துஷாந்த் ஆகியோரும் ஆஜராகி இருந்தனர்.

தொடர்ந்து மேலதிக விசாரணைக்காக வழக்கை ஜனவரி மாதம் 6 ஆம் திகதிக்கு நீதிவான் ஒத்திவைத்தார்.

# யாழ் மாவட்டத்தில் எலிக்காய்ச்சலினால் இதுவரை 121 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்

## 8,300 பேருக்கு தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன

யாழ் மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் நோய் காரணமாக இதுவரை 121 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 32 பேரும் யாழ் போதனா வைத்தியசாலையில் 8 பேரும் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

கடந்த 24 மணிநேரத்தில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 6 நோயாளர்களும் யாழ் போதனா வைத்தியசாலையில் 5 நோயாளர்களும் எலிக்காய்ச்சலுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணிநேரத்தில் இந் நோய் காரணமாக எந்தவொரு இறப்பும் ஏற்படவில்லை.

எலிக்காய்ச்சல் நோய் வராமல் தடுப்பதற்காக தடுப்பு மருந்து வழங்கும் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.



நேற்றுவரை ஏறத்தாழ 8,300 பேருக்கு தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் பாதிக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் காய்ச்சல் நோயாளர்களை இனங்காண்பதற்காக சுகாதாரப் பணியாளர்கள் வீடுவீடாகச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் பாதிக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள கால்நடைகளில் இக்கிருமித்தொற்று உள்ளதா என்பதை ஆய்வு செய்வதற்காக கொழும்பிலிருந்து கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திலிருந்து குழு ஒன்று யாழ் மாவட்டத்திற்கு நேற்று வருகை தந்தது.

இக்குழு பருத்தித்துறை, கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுக்குச் சென்று கால்நடைகளிலிருந்து ஆய்வுகளை மேற்கொண்டு குருதி மாதிரிகளை எடுத்துள்ளனர்.




# நங்கூரம் கடலில் வீழ்ந்து விட்டதால் நெடுந்தாரகையின் சேவை நிறுத்தம்

## ‘எழுதாரகை’, ‘வடதாரகை’ கூட சேவையில் இல்லை

(ந.லோகதயாளன்)

பல கோடி ரூபா செலவு செய்து சீரமைத்த நெடுந்தாரகை நங்கூரம் இன்றிச் செயல்பட முடியாது நிறுத்தி வைத்திருக்கும் அவலம் காணப்படுவதாக நெடுந்தீவு மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள கடல் கடந்த தீவுகளிற்கான போக்குவரத்திற்காக அரசின் 4 படகுகள் உள்ள போதிலும் தற்போது ஒரு படகு மட்டுமே இயங்குகின்றது.

இவ்வாறு படகுகள் பழுதடைந்து சேவையில் ஈடுபடாதமை தொடர்பிலும் படகுகளை நிர்வகிக்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் வினாவிய போது –

“எழுதாரகை“ நீண்ட நாள்கலாக பழுதடைந்துள்ளபோதும், “வடதாரகை“ அண்மையிலேயே பழுது ஏற்பட்டது. அதன் திருத்தத்திற்கு சில உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம். கிடைத்தவுடன் சீர் செய்யப்படும்.

“நெடுந்தாரகை“யினைப் பொறுத்த மட்டில் கடந்த மாதம் சேவையில் ஈடுபட்ட சமயம் அதன் நங்கூரம் கடலில் வீழ்ந்து காணாமல் போனதனால் அப் படகும் சேவையில் ஈடுபட முடியவில்லை. – எனப் பதிலளித்தனர்.

நங்கூரம் காணாமல் போனமை தொடர்பில் படகை இயக்கும் கடற்படையினரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது –

இப் படகுகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றபோதும் அதனை இயக்குவது கடற்படையினர்தான். கடந்த வாரம் சேவையில் ஈடுபட்ட சமயம் நெடுந்தீவை அண்டிய பகுதியில் நெடுந்தாரகையின் நங்கூரம் கடலில் தவறி வீழ்ந்து விட்டது. வீழ்ந்த நங்கூரத்தை மீட்பதற்காக கடற்படையினரின் சுழியோடிகள் தேடுதலில் ஈடுபட்டபோதும் கண்டு பிடிக்க முடியவில்லை. – எனப் பதிலளித்தனர்.

# ஞானசார தேரருக்கு மீண்டும் பிடியாணை



இஸ்லாமிய மதத்தை நிந்தித்தார் எனக் குற்றம் சாட்டி தொடரப்பட்டுள்ள வழக்கொன்றில் குற்றவாளியாக பெயர் குறிப்பிடபட்டுள்ள பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகோட அத்தே ஞானசார தேரரை கைது செய்ய பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தால் நேற்று வழங்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கில் நேற்று தீர்ப்பு வழங்கப்படவிருந்தது. அதற்காக அவர் முன்னிலையாக வேண்டிய நிலையில் வழக்கிற்கு வருகை தரவில்லை என்பதால் அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துமாறு உத்தரவிட்டுள்ளது.

கலகோட அத்தே ஞானசார தேரர் சுகயீனம் காரணமாக நேற்றைய வழக்கு விசாரணையில் முன்னிலையாக வில்லை என அவர் தரப்பு சட்டத்தரணிகள் நீதிமன்றத்துக்கு அறிவித்தனர்.

எவ்வறாயினும் இந்த வழக்கு தொடர்பான தீர்ப்பு ஜனவரி மாதம் ஒன்பதாம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளது.

# முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் முழக்கம் மஜீத் நேற்று மறைவு



(நூருல் ஹுதா உமர்)

இணைந்த வடகிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் ஏ.எல். அப்துல் மஜீத் (முழக்கம் மஜீத்) காலமானார்.

நீண்டகாலமாக சாய்ந்தமருதில் அமைந்துள்ள தனது வீட்டில் சுகயீனமுற்றிருந்த அவர் வீட்டில் நேற்று மாலை காலமானார். அன்னாரின் ஜனாஸா நல்லடக்கம் இன்று காலை 09.00 மணி அளவில் இடம்பெறும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

# மத்திய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து கோவையில் தி.மு.கவினர் ஆர்ப்பாட்டம்



சட்ட மேதை அம்பேத்கரை, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவமதித்து விட்டார் என கூறி, அவரை கண்டித்து தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என தி.மு.க. தலைமை நேற்று அறிவித்தது.

அதன்படி, கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. மற்றும் கோவை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், மேட்டுப்பாளையம் வீதி, வடகோவை அருகேயுள்ள, பாரதி பார்க் வீதியில் உள்ள பி.எஸ்.என்.எல் முதன்மை பொதுமேலாளர் அலுவலகம் முன்பு நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு தி.மு.க. மாநகர் மாவட்ட செயலாளர் நா.கார்த்திக் தலைமை வகித்தார்.

கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொ.அ.ரவி முன்னிலை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தி.மு.கவினர் பி.எஸ்.என்.எல் அலுவலகத்தை முற்றுகையிட்டனர். தொடர்ந்து மத்திய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து கோஷங்களை எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் மேயர் ரங்கநாயகி, துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன் மாவட்ட, மாநில நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

அதேபோல் கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், போத்தனூர் ரயில் நிலையம் அருகே நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தளபதி முருகேசன் தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தி.மு.கவினர் அங்கு உள்ள அம்பேத்கர் சிலையை சுத்தப்படுத்தி, மத்திய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து கோஷங்களை எழுப்பினார்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மத்திய அமைச்சர் அமித்ஷா பதவி விலக வேண்டும் என்பதை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர். இதில் தி.மு.க. மாநில, மாவட்ட நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# இரண்டு நாள் பயணமாக ஈரோடு சென்ற முதல்வர் ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு



இரண்டு நாள் பயணமாக நேற்று ஈரோடு சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு, தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் 2 கோடியாவது பயனாளியின் வீட்டுக்குச் சென்ற முதல்வர் அவருக்கு மருந்து பெட்டகத்தை வழங்கி, நலம் விசாரித்தார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், மாவட்டம்தோறும் சென்று கள ஆய்வு மேற்கொள்வதோடு, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, புதிய திட்டப் பணிகள் தொடக்க விழாக்களில் பங்கேற்று வருகிறார். இதன் ஒரு பகுதியாக, ஈரோட்டில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கவுள்ளார்.

இதற்காக, நேற்று காலை விமானம் மூலம் கோவை சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின், வீதி மார்க்கமாக ஈரோடு சென்றார். அவருக்கு 20 இற்கும் மேற்பட்ட இடங்களில் தி.மு.கவினர் வரவேற்பு அளித்தனர். அப்போது காரில் இருந்து இறங்கி நடந்து சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் பொதுமக்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார்.

# மாநிலங்களவை தலைவருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை நிராகரிப்பு



மாநிலங்களவை தலைவரும், துணை குடியரசுத் தலைவருமான ஜக்தீப் தன்கருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த பிரேரணை அவரது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் உள்ளதாகக் கூறி, மாநிலங்களவை துணைத் தலைவர் ஹரிவன்ஷ் அதனை நிராகரித்துள்ளார்.

இதுகுறித்து மாநிலங்களவை துணைத் தலைவர் ஹரிவன்ஷ் பிறப்பித்துள்ள உத்தரவில்,

“இந்த நம்பிக்கையில்லா பிரேரணை மிகுந்த குறைபாடுகளைக் கொண்டுள்ளது. மேலும் அவைத்தலைவரின் பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் மிகவும் அவசரமாக தயாரிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற நம்பிக்கையில்லா பிரேரணை 14 நாள்களுக்கு முன்பு கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும் என்ற தேவையை இத்தீர்மானம் பூர்த்தி செய்யவில்லை. மேலும் பிரேரணை நோட்டீஸில் தன்கரின் பெயர் தவறாக எழுதப்பட்டுள்ளது.” என்று தெரிவித்துள்ளார்.

என்றாலும், கடந்த டிசம்பர் 10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட இந்த நம்பிக்கையில்லா பிரேரணையில் 60 எம்.பிக்களின் கையெழுத்து பெறப்பட வேண்டும் என்ற விதி சரியாக கடைப்பிடிக்கப்பட்டிருந்தது.

மாநிலங்களவை பொதுச்செயலர் பி.சி. மோடி அவையில் தாக்கல் செய்த அறிக்கையில், இந்த பதவி நீக்க அறிவிப்பு அரசமைப்பு நிறுவனங்களை குறைமதிப்பிடுவது மற்றும் குடியரசு துணைத் தலைவரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதி என்று தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 20.12.2024




இன்று சவால்களைச் சந்திக்க அமைதியான போக்கை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுதலைத் தவிர்க்க வேண்டும். அமைதியுடனும் கட்டுப்பாடுடனும் இருக்க வேண்டும்.

நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க மாட்டீர்கள். சக பணியாளர்கள் ஆதரவாக இருக்க மாட்டார்கள். அவர்களால் சில தொல்லைகள் ஏற்படும்.

உங்கள் துணையிடம் குழப்பமான உணர்வுகளை வெளிபடுத்துவீர்கள். இதனால் சில விரும்பத்தகாத தருணங்கள் காணப்படும்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்துக்காகச் செலவு செய்ய நேரும். இதனால் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல் பணப்பற்றாக்குறை ஏற்படும்.

பதற்றம் காரணமாக கால் வலியால் அவதிப்பட நேரலாம்.




இன்று மிதமான வளர்ச்சி காணப்படும். பொறுமையும் உறுதியும் இருந்தால் இலக்கில் வெற்றி அடையலாம்.

நேரமின்மை காரணமாக பணியில் தாமதங்கள் ஏற்படலாம். பணியில் நீங்கள் தவறுகள் செய்ய நேரலாம். பணிகளை கவனமாகச் செய்ய வேண்டும்.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்த இயலாத சூழ்நிலை காணப்படும். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க வேண்டும். எதிர்மறை எண்ணங்களை விலக்க வேண்டும்.

பண வரவு மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று பண வரவிற்கான அதிர்ஷ்டம் காணப்படாது. தேவையற்ற விஷயங்களுக்காக இன்று பணம் செலவு செய்ய நேரும்.

மன உளைச்சல் காரணமாக தொடை மற்றும் கால் விரல்களில் வலி ஏற்படலாம்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் நாள். இன்று மன அமைதியுடன் காணப்படுவீர்கள். இன்று எடுக்கும் முடிவுகள் நற்பலன்களைத் தரும்.

பணிகள் சுமுகமாக நடக்கும். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.பணியில் உங்கள் செயல்திறனுக்கான அங்கீகாரம் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். இரவரும் நல்ல புரிந்துணர்வை பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். நிதி நிலையை நன்கு சமாளிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று மனதில் பதற்றங்கள் அதிகமாக காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பது அல்லது புதிய முயசிகள் தவிர்க்கப்பட வேண்டும். பிரார்த்தனை மற்றும் தியானம் ஆறுதல் தரும்.

பணிகளைக் கையாள்வது சவாலாக இருக்கும். நேரம் செலவு ஆகும். உங்கள் கீழ் பணி புரிபவர்களுடன் பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் பொறுமை அவசியம்.

மனதில் இருக்கும் பதற்ற நிலை காரணமாக உங்கள் துணையுடன் விவாதத்தில் ஈடுபடுவீர்கள். அமைதியாக உங்கள் உணர்வுகளை உங்கள் பிரியமானவரிடம் வெளிப்படுத்த வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது.




இன்று மகிழ்வாக இருப்பதற்கு சாதகமான நாளாக அமையாது. ஆன்மீகப் பயணங்கள் ஆறுதல் தரும். இன்றைய சவால்களை தன்னம்பிக்கையுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியில் கூடுதல் பொறுப்புகள் ஏற்க நேரும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் இருவரிடையே கருத்து வேறுபாடு காணப்படும் இதனால் உங்கள் துணையுடன் சிறந்த உறவைப் பராமரிக்க இயலாது.

பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை சாதுர்யமாகவும் கவனமாகவும் கையாள வேண்டும்.

மன உளைச்சல் காரணமாக இன்று கால் வலி உபாதைகள் ஏற்படலாம்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க மிகுந்த பொறுமை அவசியம். நம்பிக்கையுடன் செயல்பட்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று அதிக பணிச்சுமைகள் காணப்படும். நீங்கள் திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும்.

உங்களின் அகந்தைப் போக்கு உங்கள் துணையுடனான பிணைப்பை பாதிக்கும். உங்கள் கடுமையான வார்த்தைகள் அவரை பாதிக்கும். உங்கள் பிரியமானவருடன் மகிழ்ச்சியாக இருக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண வரவுக்கான வாய்ப்புக் குறைவு.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். முன்னேற்றம் பெறுவதற்கான வலிமையையும் உற்சாகமும் உங்களிடம் காணப்படும். இன்று அனைத்து விதத்திலும் செழிப்பாக இருக்கும்.

புதிய வாய்ப்புகளால் உற்சாகமும் திருப்தியும் காணப்படும். உங்கள் பணிகளை மகிழ்வுடன் செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே நெருக்கம் அதிகரிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஸ்திரமான நிதிநிலை காணப்படும்.

மகிழ்ச்சியின் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சீரும் சிறப்புமாக இருக்கும்.




இன்று முனேற்றகரமான பலன்கள் கிடைக்கும். பயணங்கள் காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மூலம் மனத்தெளிவு கிடைக்கும். இதனால் கடினமான சூழ்நிலையையும் நீங்கள் எளிதாகக் கையாள்வீர்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும். இன்று மும்மரமான பணிகள் காணப்படும். கடின உழைப்பின் மூலம் நீங்கள் வெற்றி பெறலாம்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நெருக்கம் காணப்படும்.

இன்று நிதி வளர்ச்சி திருப்தியை அளிக்கும். கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

இன்று மகிழ்ச்சி மற்றும் உற்சாகமான நம்பிக்கை காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 20.12.2024




இன்று சிறிது மந்தமாக காணப்படும். பாதுகாப்பின்மை உணர்வு உங்களிடம் காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொண்டால் அதில் நற்பலங்களைக் காண முடியும்.

பணியில் கூடுதல் பொறுப்புகளை சுமக்க நேரும். கவனமாகப் பணியாற்றுவதன் மூலம் உங்கள் திறமை மேம்படும்.

இன்று நீங்கள் அற்பமான விஷயங்களைக் கூட பெரிதாக்குவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பணம் குறைந்து காணப்படும். பணம் சம்பாதிக்கும் வாய்ப்பும் குறைந்து காணப்படும்.

உங்கள் தந்தையாருக்கு உடல் நல பாதிப்பு ஏற்படும். இதனால் பணம் செலவு செய்ய நேரும்.




இன்று வளர்ச்சி காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

பணியிடத்தில் திருப்தி நிலவும். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். மகிழ்ச்சியுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும். உங்கள் சகஜமான அணுகுமுறை மூலம் இது சாத்தியம்.

பணப்புழக்கம் சீராக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். நீங்கள் மகிழ்வுடன் இருப்பீர்கள்.

உங்கள் மனதில் காணப்படும் அமைதி காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று தன்னம்பிக்கை குறைவாகவும், நம்பிக்கையின்மையும் காணப்படும். உங்கள் லட்சியங்களை அடைவதில் தடை காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளில் தவறு நேர வாய்ப்பு உள்ளது. உங்கள் பணிகளை திட்டமிட்டு திறமையுடன் ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபட வாய்ப்புள்ளது. உறவில் அமைதி ஏற்பட இத்தகைய போக்கை தவிர்த்தல் அவசியம்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. பயணத்தின் போது பண இழப்பு ஏற்படலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தலைவலி மற்றும் உயரமுத்த வாய்ப்புகள் காணப்படும்.




இன்று பல உற்சாகமான தருணங்களை நீங்கள் சந்திக்கலாம். புதிய கட்ட வளர்ச்சி காண்பீர்கள். திட்டமிட்டு பணியாற்றுவதன் மூலம் உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

நற்பெயரும் அங்கீகாரமும் கிடைக்கப் பெறுவீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அன்பை பகிர்ந்துகொள்வீர்கள். இது இருவருக்கும் இடையே பரஸ்பர புரிந்துணர்வை வளர்க்கும்.

பண வரவு சிறப்பாக இருக்கும். கணிசமான தொகை சேமிப்பீர்கள். பயனுள்ள விஷயங்களுக்கு பணத்தைச் செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.





